**நர்சிங் துறை**

**தொடர்புக்கு:**

6357 7000 (மைய தொடர்பு)

தகவல்களை அணுக கைத்தொலைபேசி வாயிலாக QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள் அல்லது இந்த இணையதளத்தை நாடுங்கள்:

http://bit.ly/TTSHHealth-Library

இந்த தகவல் பயனுள்ளதாக இருந்ததா? படித்ததையொட்டி உங்களுக்கு ஏதேனும் கருத்து இருந்தால் தயவுசெய்து patienteducation@ttsh.com.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்

Tan Tock Seng HOSPITAL
National Healthcare Group

© டான் டோக் செங் மருத்துவமனை, 2021. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. ஆகஸ்ட் 2021 நிலவரப்படி அனைத்து தகவல்களும் சரியானவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியும் டான் டாக் செங் மருத்துவமனையின் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கப்படவோ, நகலெடுக்கவோ, தலைகீழ் தொகுப்பாக்கப்படவோ, தழுவப்படவோ விநியோகிக்கப்படவோ, வணிக ரீதியாக சுரண்டவோ, தரவுத்தளத்தில், மீட்டெடுக்கும் அமைப்பில் காட்டப்படவோ சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அனுப்பவோ கூடாது.

PECC-NUR-ED-2021-962T-v1

Tan Tock Seng HOSPITAL

Department of
**NURSING**

# நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போது பாதுகாப்பான மருந்துகளை உட்கொள்ளுதல்



தன் டாக் செங் மருத்துவமனையில் நீங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கும் நாட்களில் எங்கள் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் உங்கள் மருந்து தேவைகளைக் கவனித்துகொள்வர்.



## அவசியம் கவனிக்கவேண்டியவை:

- உங்கள் தாதியரிடம் நீங்கள் ஏற்கனவே எடுத்துக்கொண்டிருந்த மருந்துகளை தெரிவியுங்கள்.
- உங்கள் தாதியர் உங்களுடைய (ஏற்கனவே எடுத்துக்கொண்டிருக்கும்) மருந்துகளை தற்காலிகமாக வைத்திருக்க அனுமதியுங்கள்.
- உங்கள் தாதியர் உங்களுக்கு கொடுக்கும் மருந்துகளை மட்டுமே எடுத்துக்கொள்ளுங்கள்.
- நீங்கள் உங்களுடைய நீண்ட காலத்திற்கான மருந்துகளை, குறிப்பாக இன்சுலின், இரத்தம் உறைதலை தடுக்கும் மருந்துகள் மற்றும் பாரம்பரிய மருந்துகள் ஆகியனவற்றை எடுத்துக்கொள்வதற்கு முன் உங்கள் மருத்துவர் மற்றும் தாதியரிடம் ஆலோசியுங்கள்.
- உங்களுக்கு உணவு மற்றும் மருந்து ஒவ்வாமை ஏதேனும் இருந்தால் அதை உங்கள் மருத்துவர், தாதியர் மற்றும் மருந்தாளுநரிடம் தெரிவியுங்கள்.



## மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வரை

- உங்களுக்கு நீண்ட காலத்திற்கான மருந்துகள் உட்பட எல்லா மருந்துகளும் உங்கள் மருத்துவர் மற்றும் மருந்தாளுநரால் பரிசீலனை செய்யப்படும்.
- உங்கள் மருத்துவர் உங்கள் உடல்நிலைக்கேற்றபடி தகுந்த மருந்துகளை உங்களுக்கு பரிந்துரைப்பார்.
- உங்கள் தாதியர் உங்களுடைய மருந்துகளை சரியான நேரத்தில் உங்களுக்கு அளிப்பார்.
- நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகளைப் பற்றிய உங்களுடைய சந்தேகங்களை உங்கள் மருத்துவர் அல்லது தாதியரிடம் தெரிவியுங்கள்.

## நீங்கள் தவறாக மருந்தை உட்கொள்ளும்போது என்ன நடக்கும்?

மருந்தால் ஏற்படும் விளைவுகள் குறையும் அல்லது அதிகரிக்கும் → விரும்பத்தகாத பக்கவிளைவுகள் நேரிடலாம் → மருத்துவமனையில் நீண்ட நாட்கள் தங்கியிருக்க நேரிடலாம்

உங்கள் மருந்துகளை நீங்கள் பாதுகாப்பாக உட்கொள்வதை உறுதி செய்வதற்கு எங்களுக்கு உங்கள் ஒத்துழைப்பை வேண்டுகிறோம்.

